# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1802 - 2013 මාර්තු මස 15 වැනි සිකුරාදා - 2013.03.15

*1802 ஆம் இலக்கம் – 2013 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 15 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (IIஅ) – விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் – வெற்றிடம் | 392 | பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 393 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்****. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்****, அதாவது 2013, ஏப்பிறல் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2013, மாச்சு மாதம் 22 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பீ. எச். எல். வீ. டி சில்வா,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*
*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).

1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகாண் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.

அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :**

3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-

3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.

3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகாண் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.

3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.

3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்க வேண்டியதில்லை.

3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.

4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.

4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.

4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.

**5. யுத்த சேவைச் சலுகை :**

5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.

6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி - கண்டி மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 15 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கண்டி | உடுநுவர | ஹியரபிற்றிய பகுதியில் உடுநுவர யட்டிநுவர பிரிவில் மேலதிக விவாகப் பதிவாளர் பதவி (கண்டிய/பொது) | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கண்டி |

3-730

---

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவி - மாத்தளை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவுசெய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவுப் பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும் குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும் பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் அலுவலகம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2013, சித்திரை மாதம் 19 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்லை,
2013, மாசி 28.

**அட்டவணை**

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| மாத்தளை | மாத்தளை | மாத்தளை நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு பதிவாளர் பதவி | அரசாங்க அதிபர்/ மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், மாத்தளை |

3-731

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

காணி, காணி அபிவிருத்தி அமைச்சு

இலங்கை நில அளவைத் திணைக்களம்

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ Level 2/3/4 ) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2013

நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழில் தகைமை மட்டம் 2/3/4 (NVQ level 2/3/4) பாடநெறிக்காகக் கீழ்க்காணும் தகைமை கொண்ட விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்களுள் அவர்களது தகைமைகளுக்கும் திறமைகளுக்கும் அமைய இப்பாடநெறிக்குத் தேவையான அளவுக்கேற்ப மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவர்.

2. இப்பாடநெறியைப் பயில்வதற்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரர்கள்-

(i) நற்பண்புகள் உள்ளவராக இருத்தல் வேண்டும் ;

(ii) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(iii) விண்ணப்பம் சமர்ப்பிக்கப்படும் போதே சேர்த்துக்கொள்ளப் படுவதற்கான சகல தகைமைகளையும் பூரணப்படுத்தியிருத்தல் வேண்டும் ;

(iv) 18 வருடங்களுக்கும் 45 வருடத்திற்கும் இடைப்பட்ட வயதுடையவராக இருத்தல் வேண்டும் ;

(v) இரு அமர்வுகளுக்கு மேற்படாமல் க.பொ.த (சாதாரண) தரப் பரீட்சையில் இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும்.

3. விண்ணப்பதாரிகள் இவ்வறிவித்தலில் காணப்படும் மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைவாக 11.7" x 8.3" (A4) அளவிலான

தாளில் தாமாகவே தயாரித்துக்கொள்ளல் வேண்டும். இலக்கம் 14 இன் கீழ் குறிப்பிடப்பட்டபடி ரூபா 10 பெறுமதியான முத்திரையை ஒட்டி அதன் மேல் தமது வழமையான கையொப்பத்தையிட்டு பெறுமதிநீக்கம் செய்திருத்தல் வேண்டும். உரிய முறையில் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்கள் 2013.04.05 ஆம் திகதியன்றோ அதற்கு முன்னரோ கிடைக்கத்தக்க வகையில் நில அளவையாளர் நாயகத்திற்கு பதிவுத் தபாலில் ''நில அளவையாளர் நாயகம், நில அளவைத் திணைக்களம், த.பெ. இல. 506, கிருல வீதி, கொழும்பு 05'' என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

4. கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பாடநெறியின் பெயர், அதன் குறியீட்டு இலக்கம் என்பன குறிப்பிடப்படல் வேண்டும்.

5. குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

6. இப்பாடநெறி 07 வாரகால முழுநேர பாடநெறியாகும். கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இரண்டு வார முழுநேர வதிவிடப் பாடநெறியுடனும், களத்தில் நான்கு வார நடைமுறைப் பயிற்சி பாடநெறியுடனும் நில அளவையாளர் நாயக அலுவலகத்தில் ஒரு வார பாடநெறியுடனும் கூடியதாக மூன்று பகுதிகளைக் கொண்டதாக அமையும், தியத்தலாவை அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் தங்கியிருக்கும் காலப்பகுதியில் உபயோகிக்கப்படும் மின்சார மற்றும் நீர் கட்டணமாக ஒரு மாணவரிடமிருந்து ரூபா 1,000 அறவிடப்படுவதுடன் பாடநெறிக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் பாடநெறி ஆரம்பத் திகதியன்று அளவையியல் படமாக்கல் நிறுவனத்தில் இக் கட்டணத்தை செலுத்தி பற்றுச் சீட்டினை பெற்றுக்கொள்ளல் வேண்டும். இப்பாடநெறியின் இறுதி வாரத்தின் இறுதியில் பாடநெறியினை திருப்திகரமாக பூர்த்தி செய்த மாணவர்களுக்கான சான்றிதழ்கள் நில அளவையாளர் நாயக அலுவலகத்தில் வழங்கப்படும்.

| பகுதி | காலம் | நடைபெறும் இடம் | வதிவிடம் | உணவு / பானம் |
|---|---|---|---|---|
| 1 | 2 வாரம் | அளவையியல் படமாக்கல் நிறுவனம் தியத்தலாவை முழுநேர வதிவிடப் பாட நெறி | வதிவிடம் வழங்கப் படும் | வழங்கப்பட மாட்டாது |
| 2 | 4 வாரம் | வெளிக்களத்தில் அமைந் துள்ள பிரதேச நில அளவை காரியாலயத் துடனான நடை முறைப் பயிற்சி | வழங்கப்பட மாட்டாது | வழங்கப்பட மாட்டாது |
| 3 | 1 வாரம் | நில அளவையாளர் அலு வலகம் | வழங்கப்பட மாட்டாது | வழங்கப்பட மாட்டாது |

7. பாடநெறி சிங்களம் /தமிழ் மொழிகளில் நடாத்தப்படும்.

8. தகுதியானவர்கள் நேர்முகப்பரீட்சை மூலமாக தெரிவு செய்யப்படுவர்.

9 ஆவணங்களினதும், சான்றிதழ்களினதும் பிரதிகள் விண்ணப்பப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். தமது தகைமைகளை நிரூபிப்பதற்குத் தேவையானதும் ஏற்கக்கூடியதுமான ஆவணங்களின் மூலப்பிரதிகளை நேர்முகப்பரீட்சையின்போது வழங்கத்தவறும் விண்ணப்பதாரிகள் தகைமையற்றவராகக் கருதப்படுவர்.

10. சகல ஆவணங்களினதும் நம்பகத்தன்மைக்கு விண்ணப்ப தாரியே முழுப் பொறுப்புடையவராவார். மாற்றம் செய்யப்பட்ட அல்லது பொய்யான அல்லது உண்மையை உறுதி செய்யத் தவறும் ஆவணங் களைச் சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

11. இவ் வர்தகமானியில் குறிப்பிடப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டில் நடத்தப்படுவதற்குரிய இப்பாடநெறியை நடாத்துதல் ஒரு பாடநெறிக்குச் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர் தொகை அல்லது வருடத்தினுள் நடாத்தப்பட வேண்டிய பாடநெறிகளின் தொகை போன்றவை குறித்த தீர்மானங்கள் நில அளவையாளர் நாயகத்தினால் மேற்கொள்ளப்படும்.

எஸ். எம். டபிள்யு. பேர்ணாந்து,
நில அளவையாளர் நாயகம்.

நில அளவைத் திணைக்ளம்,
த.பெ. இல. 506,
கொழும்பு 5.
www.survey.gov.lk
2013.02.28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**நில அளவைத் திணைக்களத்தினால் நில அளவை புல உதவியாளர்களுக்காக நடாத்தப்படும் தேசிய தொழிற் தகைமை மட்டம் 2/3/4 (NVQ land 2/3/4) பாடநெறிக்கு மாணவர்களைச் சேர்த்துக்கொள்ளல் - 2013 கல்வியாண்டு**

1. பாடநெறியின் பெயர் :----.

2. பாடநெறிக் குறியீட்டு இலக்கம் :----.

3. விண்ணப்பதாரியின் முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

4. முதலெழுத்துக்களால் குறிப்பிடப்படும் பெயர்கள் :----.

5. நிரந்தர முகவரி :----.

6. தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கம் :----.
மின்னஞ்சல் :----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

8. மாவட்டம் :----.
தேர்தற் தொகுதி :----.
பிரதேச செயலாளர் பிரிவு :----.
கிராம உத்தியோகத்தர் பிரிவு :----.

9. பிறந்த திகதி (2013.04.05 ஆம் திகதியன்று வயது )

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

10. பால் (ஆண் பெண்) :----.

11. சேர்த்துக் கொள்ளப்படுவதற்கான தகைமைகள் வர்த்தமான அறிவித்தலுக்கமைய நீங்கள் பெற்றுள்ள தகைமைகள் :

பாடநெறியில் நுழைவதற்கான தகைமைகள் சான்றிதழ்கள் பற்றிய விபரங்கள் :

பெற்றுள்ள NVQ பாடநெறி பயின்ற சேவைக் காலம் சான்றிதழின் பெயர், நிறுவனத்தின் பெயர், அனுபவம் இருப்பின் அதுபற்றிய விபரம் (சுருக்கமாக வருடம் மாதம் ) :

12. கல்வித் தகைமைகள் :

(அ) க. பொ. த. ப. (சா. த.) பரீட்சை பெறுபேறுகள் (இரண்டு தடவைக்கு மேற்படாத அமர்வுகளில்)

| # | பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|---|
| | | | | |

(ஆ) க. பொ. த (உயர்தரம்) பரீட்சைக்கு தோற்றி இருப்பின் அதன் பெறுபேறுகள்

| # | பரீட்சை சுட்டிலக்கம் | பரீட்சைக்குத் தோற்றிய ஆண்டு | பரீட்சைக்குத் தோற்றிய பாடங்கள் | பெறுபேறு |
|---|---|---|---|---|
| | | | | |

13. இதற்கு முதலில் NVQ பாடநெறியினைப் பயின்றிருந்தால் அது பற்றிய விபரங்கள் :----.
பாடநெறியின் இலக்கம்/குறியீடு :----.
NVQ தகைமை பட்டம் :----.
நிறுவனம் :----.

14. விண்ணப்பதாரியின் உறுதியுரை.- இப்படிவத்தில் என்னால் குறிப்பிடப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கு உட்பட்ட வரையில் உண்மையானவை எனவும், விண்ணப்பித்துள்ள பாடநெறிக்குத் தேவையான தகைமைகள் எனக்குண்டு என்றும் இத்தால் உறுதி செய்கின்றேன். மேலும் இப்பாடநெறி தொடர்பான அனைத்து சட்டதிட்டங்களுக்கும் உட்பட்டு நடப்பேன் என்றும் நில அளவையாளர் நாயகத்தின் தீர்மானமே இறுதியானது என்றும் ஏற்றுக்கொள்கின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.
(10 ரூபா பெறுமதியான முத்திரையின் மீது ஒப்பமிட்டு பெறுமதி நீக்கம் செய்யவும் ).

திகதி :----.

3-723

## தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு

தொல்பொருள் திணைக்களத்திற்கு முகாமைத்துவ உதவியாளர் – தொழிநுட்பவியலல்லாத பிரிவு 2 பதவி வகை ஆராய்ச்சி உதவியாளர்/அகழ்வு உதவியாளர்/அகழ்வு மற்றும் தொல்பொருள் காட்சிச்சாலை உதவியாளர்/இரசாயன பாதுகாப்பு உதவியாளர்/ஆய்வுகூட உதவியாளர்/பராமரிப்பு உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை - 2013

தொல்பொருளியல் திணைக்களத்தின் ஆராய்ச்சி உதவியாளர்/அகழ்வு உதவியாளர்/ அகழ்வு மற்றும் தொல்பொருள் காட்சிச்சாலை உதவியாளர்/ இரசாயனப் பாதுகாப்பு உதவியாளர்/ ஆய்வுகூட உதவியாளர்/பராமரிப்பு உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து 2013.04.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பிவைத்தல் வேண்டும்.

1. **சம்பள அளவுத்திட்டம்**.- தரம் III (அரச நிருவாக சுற்றறிக்கை 06/2006 இன்கீழ் MN-1-2006A)

ரூபா 13,120 - 10 x 145 - 11 x 170 - 10 x 240 - 10 x 320 - ரூபா 22,040.

2. **பணியிலமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- தரம் III - இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய சம்பளம் பெறுவதற்கு உரித்துடையது ; மூன்று வருட தகுதிகாண் காலத்தின்கீழ் நியமனங்கள் செய்யப்படும்.

3. **தேவையான தகைமைகள்**.- அனைத்து விண்ணப்பதாரிகளும் பின்வரும் தகைமைகளை கொண்டுள்ளமைக்கான சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) சிறந்த நன்னடத்தையும், தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2013.04.15 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 30 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல்.

(இ) கல்வித் தகைமைகள்.- மேற்படி அனைத்துப் பதவிகளுக்கும் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்வதற்காக கீழ்க்குறிப்பிடப் பட்டுள்ள கல்வித் தகைமைகள் சகலவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) சிங்களம்/ தமிழ்/ ஆங்கில மொழி மற்றும் கணிதப் பாடத்துடன் மேலும் இரு பாடங்களில் திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் க. பொ. தராதரப்பத்திர (சா. த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் மற்றும்

(ii) ஒரு பாடத்திலேனும் (சாதாரண பொதுப் பரீட்சை தவிர்ந்த) க. பொ. தராதரப்பத்திர (உ. த.) பரீட்சையில் சித்தியடைந் திருத்தல்.

(iii) ஆய்வுகூட உதவியாளர் மற்றும் இரசாயன பாதுகாப்பு உதவியாளர் ஆகிய பதவிகளுக்காக க. பொ. தராதரப் பத்திர (உ. த.) பரீட்சையில் இரசாயனவியல் பாடத்தில் சித்தியடைந்திருத்தல்.

(ஈ) தொழிற் தகைமைகள்.- தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் ஆறு (06) மாதத்திற்கு குறையாத கணனி பாடநெறியொன்றை கற்றிருத்தல் அல்லது கணனி செயற்பாட்டு அனுமதிப்பத்திரத்தைப் பெற்றிருத்தல்.

4. விண்ணப்பதாரிகள் கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களின் நிழற்பிரதிகளை தமது விண்ணப்பப்பத்திரத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு சான்றிதழ்கள் ;

(iii) கல்வித் தகைமைகளை உறுதி செய்வதற்கான சான்றிதழ்கள் ;

(iv) வதிவை உறுதிப்படுத்தும் கிராம அலுவலரின் சான்றிதழ் ;

(v) ஏனைய தொழிற் சான்றிதழ்கள் ;

(vi) தேசிய அடையாள அட்டை.

5. விண்ணப்பங்கள் 2013.04.15 ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாகக் குறிப்பிட்டு பதிவுத்தபால் மூலம் பின்வரும் முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும்.

6. (i) பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவாகும். இதனை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் தொல்பொருள் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் 2003-02-13 என்ற இலக்க வருமானத் தலைப்பின்கீழ் வைப்புச் செய்தல் வேண்டும்.

(ii) சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள மொழி மூலமே சகல வினாப்பத்திரங்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழியை மாற்றம் செய்வதற்கு எந்தவொரு விண்ணப்பதாரர்களுக்கும் இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) *பாடங்களும் பாடத்திட்டமும்.*- திறந்த போட்டிப் பரீட்சை பின்வரும் விடயங்கள் தொடர்பான எழுத்துப் பரீட்சை வினாத்தாள்களை உள்ளடக்கியது.

பாடங்கள் :

| பாடங்கள் | நேரம் | மொத்தப் புள்ளி | சித்தியடைவதற்கான புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| பொது அறிவு | 1 மணித்தியாலம் | 100% | 40% |

பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவு | (i) விண்ணப்பதாரியின் விளங்கிக்கொள்ளும் சக்தி, தர்க்கித்தல் ஆற்றல் மற்றும் பொது அறிவு சக்தியை அளவிடுதல் |
| 2. பொது அறிவு | (ii) சமகால நிகழ்வுகள் தொடர்பான அறிவு |

(v) இப்பதவிகளுக்கான ஆட்சேர்ப்புச் செய்யும் திறந்த போட்டிப் பரீட்சை தொல்பொருள் ஆணையாளர் நாயகத்தினால் அல்லது தொல்பொருள் ஆணையாளர் நாயகத்தினால் அனுமதியளிக்கப்படுகின்ற நிறுவனமொன்றினால் நடாத்தப்படும்.

7. அரச சேவைகள் பதவிகளுக்கு நியமனம் செய்தல் தொடர்பான சகல நிபந்தனைகளும் இதற்கும் ஏற்புடையதாகும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள விண்ணப்பதாரர்களாயின் தமது விண்ணப்பப்படிவத்தை தனது திணைக்களத் தலைவரூடாக உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை இணையத்தளத்தினூடாக தொல்பொருள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.Archaeology.gov.lk எனும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர் நாயகம்.

தொல்பொருள் திணைக்களம்,
சேர். மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு**

*தொல்பொருள் திணைக்களத்திற்கு முகாமைத்துவ உதவியாளர் - தொழிநுட்பவியலல்லாத பிரிவு 2 பதவி வகை ஆராய்ச்சி உதவியாளர்/ அகழ்வு உதவியாளர்/அகழ்வு மற்றும் தொல்பொருள் காட்சிச்சாலை உதவியாளர்/இரசாயன பாதுகாப்பு உதவியாளர்/ஆய்வுகூட உதவியாளர்/பராமரிப்பு உதவியாளர் ஆகிய பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013*

(விண்ணப்பிக்கும் பதவியை இங்கு குறிப்பிடவும்.)

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
சிங்களம் - 2
தமிழ் - 3

(உரிய கூட்டினுள் குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களை பின்னர் குறிப்பிட்டு முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உதா :- PERERA, A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. 3.1 பால் : (ஆண்/பெண்)
ஆண் - 0
பெண் - 1

(உரிய கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

வருடம் : [ ][ ][ ][ ] மாதம் : [ ][ ] திகதி : [ ][ ]

3.3 2013.04.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : [ ][ ] மாதங்கள் : [ ][ ] நாட்கள் : [ ][ ]

4. கல்வி தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை சித்தியடைந்த வருடம் :
(i) சுட்டெண் :----.
(ii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) சித்தியடைந்த வருடம் :

(i) சுட்டெண் :----.
(ii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. கணனி தகைமைகள் :----.

6. தற்போது வகிக்கும் பதவி தொடர்பான விபரங்கள் :

6.1 தற்போதைய சேவை நிலையம் :----.

6.2 வகிக்கும் பதவி :----.

6.3 பதவிக்கு நியமனம் செய்யப்பட்ட திகதி :----.

6.4 சேவை நிரந்தரப்படுத்தப்பட்ட திகதி :----.

7. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றிற்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? (ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

| ஆம் | | | இல்லை | |
|---|---|---|---|---|

(உரிய கூட்டினுள் அடையாளமிடவும்)

**8. விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும், சகல பகுதிகளும் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவும், என்னால் வழங்கப்பட்டுள்ள இந்த வெளிப்படுத்துகை பொய்யானது என உறுதிப்படுத்தப்படுமிடத்து, நியமனம் செய்யப்பட முன்னர் தகுதியற்றவராகுவதோடு, நியமனம் செய்யப்பட்ட பின்னர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் உட்படுத்தப்படுவேன் என நான் அறிவேன் எனவும், சகல சட்டதிட்டங்களுக்கும் கீழ் பணிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**9. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ................................ ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
உறுதிப்படுத்தும் அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையை இடவும்.)
திகதி :----.

**10. தற்போது அரச சேவையிலுள்ள ஒருவர் எனில் நிறுவனத் தலைவரின் பரிந்துரை :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./ திருமதி/ செல்வி ................................................ இத்திணைக்களத்தில்/ அமைச்சில் .................................... ஆந் திகதி தொடக்கம் ...................................... பதவியில் சேவையாற்றுகின்றாரெனவும் அவரது பணி மற்றும் வரவு திருப்திகரமானதெனவும், அவருக்கெதிராக எவ்விதமான முறைப்பாடுகளும் இல்லை எனவும், அவரால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் சரியானவை யென்றும் இத்தால் சான்றுபடுத்துகின்றேன்.

----,
நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(பதவி முத்திரையை இடவும்.)

திகதி :----.

3-622

**தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு**

*தொல்பொருளியல் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/வரைபட வரைஞர்/தொல்பொருளியல் மீள் படப்பிடிப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013*

தொல்பொருளியல் திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/வரைபட வரைஞர்/தொல்பொருளியல் மீள் படப்பிடிப்பாளர் பதவிகளுக்கு இத்தால் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்களைக் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கேற்ப தயாரித்து 2013.04.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு எனக்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்**.- தரம் III இன்கீழ் (அரச நிருவாக சுற்றறிக்கை 06/2006 இன்கீழ் MN-3-2006A)

ரூபா 15,005 - 180 x 4 - 240 x 6 - 320 x 11 - 360 x 20 - ரூபா 27,885.

பயிற்சித் தரம் - மாதாந்தப்படி ரூபா 12,920.

3. **பணிக்கமர்த்துவதற்கான நிபந்தனைகள்**.- தரம் III - இப்பதவி நிரந்தரமானது ; ஓய்வூதிய சம்பளம் பெறுவதற்கு உரித்துடையது ; மூன்று வருட தகுதிகாண் காலத்தின்கீழ் நியமனங்கள் செய்யப்படும்.

பயிற்சித் தரம்.- பயிற்சி பெறுவோர் இரண்டு வருட கோட்பாடு மற்றும் செயல்முறை பயிற்சிகளை முடித்துக்கொண்டதன் பின்னர் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடைவோர் பெற்றுக்கொள்ளும் உச்ச புள்ளிகளின் ஒழுங்கு வரிசைக்கு ஏற்ப நிலவும் பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

4. **தேவையான தகைமைகள்**.- சகல விண்ணப்பதாரர்களும் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளமைக்கான சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும் :-

(அ) சிறந்த நடத்தையும், தேகாரோக்கியமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஆ) 2013.04.15 ஆந் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவராகவும் 30 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) கல்வித் தகைமைகள்.- மேற்படி அனைத்துப் பதவிகளுக்கும் தரம் III மற்றும் பயிற்சித் தரத்திற்கும் ஆட்சேர்ப்பு செய்வதற்கு கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகைமைகள் அனைத்தையும் பூர்த்திசெய்திருத்தல் வேண்டும் :-

(i) மேற்படி பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு பின்வரும் தகைமைகளைக் கொண்ட 18 வயதிற்கும் 30 வயதிற்கும் இடைப்பட்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

(ii) மொழி அல்லது இலக்கியம், கணிதம், விஞ்ஞானம் உட்பட மற்றுமொரு பாடத்திற்கு திறமைச் சித்தியுடன் ஆறு பாடங்களில் க.பொ.த.(சா.த.) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(iii) தூயகணிதம்/பிரயோக கணிதம்/இணைந்த கணிதம் மற்றும் பௌதீக விஞ்ஞானம் ஆகிய பாடங்களில் இரண்டு உட்பட க. பொ. த. (உ. த.) பரீட்சையில் விஞ்ஞானப் பாடங்கள் 3 இல் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(iv) கணனித் தலைப்புத் தயாரிப்பு/தட்டச்சு/சுருக்கெழுத்து தொடர்பாக மூன்றாம் நிலை மற்றும் தொழில்சார் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தராதரப்பத்திரப் பாடநெறியொன்றில் சித்தியடைந்திருத்தல்

(ஈ) தரம் III இற்கு விண்ணப்பிப்பதற்கான தொழிற் தகைமைகள்.- தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்) வரைபட வரைஞர் பதவிகளில் தரம் III இற்கான தொழிற்றகைமைகள்.- தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்) மற்றும் வரைபட வரைஞர் பதவிகளில் தரம் III இற்கு மொறட்டுவைப் பல்கலைக்கழகம் அல்லது அம்பாறை ஹாடி நிறுவகம்/தேசிய பயிலுநர் மற்றும் தொழில்நுட்ப பயிற்சி அதிகார சபை/இலங்கை உயர் தொழில்நுட்ப நிறுவனம் இலங்கை திறந்த பல்கலைக்கழகம்/இலங்கை பொறியியல் நிறுவகம்/என்பவற்றினால் வழங்கப்படுகின்ற தேசிய தொழிற்திறன் மட்டம் (NVQ) 5 இற்கு குறையாத தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா அல்லது பொறியியல் டிப்ளோமா அல்லது அந்த தொழில்நுட்ப தகைமைகளுக்கு அனைத்து வழிகளிலும் சமமானது என இலங்கை தொழில்நுட்ப சேவைகள் சபையினால் ஏற்றுக்கொள்ளக்கூடிய வேறு தகைமைகள்.

தொல்பொருளியல் மீள் படப்பிடிப்பாளர் பதவி தரம் III பதவிக்கான தொழிற் தகைமைகள்.- தொல்பொருளியல் மீள் படப்பிடிப்பாளர் பதவி தரம் III இற்கு விண்ணப்பிப்பவர்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் அல்லது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனமொன்றினால் வழங்கப்படுகின்ற புகைப்படம் பிடித்தல் தொடர்பான டிப்ளோமா பட்டம் பெற்றிருத்தல் வேண்டும்.

(உ) பயிற்சித் தரத்திற்கு விண்ணப்பிப்பதற்கான தொழிற்றகைமைகள்.- தொழில்நுட்ப அலுவலர் மற்றும் வரைபட வரைஞர் பதவிகளின் பயிற்சித் தரத்திற்கும் விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பக் கல்லூரி ஒன்றிலே தொழிற்றுறையுடன் தொடர்புடைய தேசிய தொழிற்திறன் மட்டம் (NVQ) 5 இற்கு குறையாத தொழில்நுட்பச் சான்றிதழ் (மூன்று வருட பகுதி நேரப் பயிற்சிப் பாடநெறி) சான்றிதழைப் பெற்றிருத்தல்.

வரைபட வரைஞர் பயிற்சித் தரத்திற்கான தொழிற்றகைமைகள்.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற்கல்வி நிறுவகம் ஒன்றிலே வரைபடம் வரைவு தொடர்பான ஒரு வருட முழுநேர பயிற்சியை வெற்றிகரமாகப் பூர்த்திசெய்து குறித்த சான்றிதழைப் பெற்றிருத்தல்.

தொல்பொருள் மீள் படப்பிடிப்பு உத்தியோகத்தர் பயிற்சித் தரத்திற்கான தொழில் தகைமைகள்.- அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தொழிற் கற்கை நிறுவகமொன்றினால் வழங்கப்படுகின்ற புகைப்படம் பிடித்தல் தொடர்பான ஒரு வருட முழுநேர அல்லது இரு வருட பகுதி நேர தொழில்சார் பாடநெறி ஒன்றினைப் பயின்று சான்றிதழ் பெற்றிருத்தல்.

5. விண்ணப்பதாரர்கள் பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை தமது விண்ணப்பப்படிவங்களுடன் இணைத்தல் வேண்டும் :

(i) பிறப்புச் சான்றிதழ் ;

(ii) அண்மையில் பெற்றுக்கொண்ட இரண்டு நற்சான்றிதழ்கள் ;

(iii) கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்துவதற்கான சான்றிதழ்கள் ;

(iv) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக கிராமசேவை அலுவலரின் சான்றிதழ் ;

(v) வேறு தொழில்சார் சான்றிதழ்கள் ;

(vi) சேவை அனுபவம் தொடர்பான சான்றிதழ் ;

(vii) தேசிய அடையாள அட்டை.

6. விண்ணப்பங்கள் 2013.04.15 ஆந் திகதிவரை ஏற்றுக்கொள்ளப் படும். விண்ணப்பிக்கும் பதவிப் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக எழுதி பதிவுத்துபாலில் பின்வரும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் :-

பணிப்பாளர் நாயகம்,
தொல்பொருளியல் திணைக்களம்,
சேர். மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07.

7. (i) பரீட்சைக் கட்டணம் 300 ரூபாவாகும். அதனை எந்தவொரு பிரதேச செயலாளர் அலுவலகத்திலும் தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தின் பெயருக்கு வருமானத் தலைப்பு இலக்கம் 2003-02-13 இற்கு வைப்புச் செய்தல் வேண்டும்.

(ii) சகல விண்ணப்பதாரர்களும் விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மொழிமூலம் அனைத்து வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பப்படிவத்தில் குறிப்பிட்டுள்ள மொழியை பின்னர் மாற்றுவதற்கு விண்ணப்பதாரர்களுக்கு இடமளிக்கப்பட மாட்டாது.

(iv) பாடங்கள் மற்றும் பாடத்திட்டம்.- திறந்த போட்டிப் பரீட்சை பின்வரும் விடயங்கள் தொடர்பான எழுத்துப் பரீட்சை வினாப் பத்திரங்களை உள்ளடக்கியது.

| வினாத்தாள் | காலம் | மொத்தப் புள்ளி | சித்தி புள்ளி |
|---|---|---|---|
| நுண்ணறிவு | 1 மணித்தியாலம் | 100% | 40% |
| பொதுப் பரிசோதனை (தொழில்நுட்ப மற்றும் விடயத்துடன் தொடர்பான பரிசோதனை | 1 1/2 மணித்தியாலம் | 100% | 40% |

பாடத்திட்டம் :

| வினாத்தாளின் பெயர் | பாடத்திட்டம் |
|---|---|
| 1. நுண்ணறிவு (1 மணித்தியாலம்) | விண்ணப்பதாரியின் தர்க்க ரீதியான தன்மை அவரது சிந்தனைப் பகுப்பாய்வு தீர்மானம் எடுக்கும் சக்தி என்பவற்றை இனங்காணுவதற்கான வினாப்பத்திரம் |
| 2. பொது பரிசோதனை (தொழிநுட்பம் மற்றும் விடய அறிவு பற்றிய பரிசோதனை) 1 மணித்தியாலம் 30 நிமிடம் | (அ) வரைபடவரைஞர்,தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்) பதவிக்காக<br>(i) வரலாற்றுச் சிறப்புமிக்க தூபிகள் தொடர்பான அடிப்படை அறிவு<br>(ii) கட்டடக் கலை பாதுகாப்பு கோட்பாடுகள் தொடர்பான சாதாரண அறிவு<br>(iii) மதிப்பீடுகளைத் தயாரித்தல்/ மதிப்பீடுகளைத் திட்டமிடுதல் தொடர்பான அறிவு<br>(iv) வரைபடம் வரைதல் மற்றும் உபகரணங்கள் பற்றிய அறிவு/ கட்டட நிர்மாண தொழில் நுட்பம் பற்றிய அறிவு<br><br>(ஆ) புகைப்படப் பிடிப்பாளர் பதவிக்காக-<br>(i) அடிப்படைப் புகைப்படக் கருவிகள் பற்றிய அறிவு<br>(ii) புகைப்படப் பிடிப்பு தொழில் நுட்ப செயலாற்றுகை தொடர்பான அறிவு<br>(iii) புகைப்படம் பிடித்தலுடன் தொடர்புடைய இரசாயன பதார்த்தங்கள் தொடர்பான அறிவு<br>(iv) அச்சிடல் கடதாசி வகைகள் தொடர்பான அறிவு<br>(v) புகைப்படம் பிடித்தல் தொடர்பான அடிப்படைக் கோட்பாடுகள் |

(v) இப்பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை தொல்பொருள் பணிப்பாளர் நாயகத்தினால் அனுமதி வழங்கப்படுகின்ற நிறுவகம் ஒன்றினால் நடாத்தப்படும்.

7. அரசாங்க சேவைகள் பதவிகளுக்கு நியமனம் செய்தல் தொடர்பான சகல நிபந்தனைகளும் இதற்கும் ஏற்புடையதாகும். அரச சேவையில் ஈடுபட்டுள்ள அலுவலர் ஒருவராயின் விண்ணப்பப் படிவத்தை தனது திணைக்களத் தலைவரூடாக உறுதிப்படுத்தி அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தகவல்களை இணையத்தளத்தின் ஊடாக தொல் பொருள் திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையத்தளமான www.Archaeology.gov.lk எனும் முகவரியிலிருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

பணிப்பாளர் நாயகம்.

தொல்பொருளியல் திணைக்களம்,
சேர். மார்க்கஸ் பர்னாந்து மாவத்தை,
கொழும்பு 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தேசிய மரபுரிமைகள் தொடர்பான அமைச்சு**

*தொல்பொருளியல் திணைக்களத்திற்கு இலங்கை தொழில்நுட்பவியல் சேவையைச் சேர்ந்த தொழில்நுட்ப அலுவலர் (பாதுகாப்பு உதவியாளர்)/வரைபட வரைஞர்/தொல்பொருளியல் மீள் படப்பிடிப்பாளர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2013*

(அலுவலக உபயோகத்திற்காக)

பரீட்சைக்குத் தோற்றும் மொழிமூலம் :
*சிங்களம் - 2*
*தமிழ் - 3*
(உரிய கூட்டினுள் குறிப்பிடவும்.)

விண்ணப்பிக்கும் தரம் :
*தரம் III - 1*
*பயிற்சி - 2*
(உரிய கூட்டினுள் குறிப்பிடவும்.)

1. 1.1 முதலெழுத்துக்களை பின்னர் குறிப்பிட்டு முதலெழுத்துக் களுடன் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.
உதா :- PERERA, A. B. C.

1.2 முழுப்பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

1.3 முழுப்பெயர் (சிங்களத்தில்/தமிழில்) :----.

1.4 தேசிய அடையாள அட்டை இலக்கம் :

2. 2.1 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) :----.

2.2 நிரந்தர முகவரி (சிங்களத்தில்/தமிழில்) :----.

3. 3.1 பால் : (ஆண்/பெண்)
ஆண் - 0
பெண் - 1
(உரிய கூட்டினுள் எழுதவும்)

3.2 பிறந்த திகதி :

வருடம் : மாதம் : திகதி :

3.3 2013.04.15 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் : மாதங்கள் : நாட்கள் :

4. கல்வி தகைமைகள் :

4.1 க. பொ. த. (சா. த.) பரீட்சை சித்தியடைந்த வருடம் :
(i) சுட்டெண் :----.
(ii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |
| 5. | |
| 6. | |
| 7. | |
| 8. | |
| 9. | |
| 10. | |

4.2 க. பொ. த. (உ. த.) சித்தியடைந்த வருடம் :

(i) சுட்டெண் :----.
(ii) பெறுபேறு :----.

| பாடம் | தரம் |
|---|---|
| 1. | |
| 2. | |
| 3. | |
| 4. | |

5. தொழில்நுட்ப தகைமைகள் :

| நிறுவகம் | பயின்றுள்ள பாடநெறி | கால எல்லை | சித்தி | சான்றிதழ் இலக்கமும் திகதியும் |
|---|---|---|---|---|
| | | | | |

6. கணனி அல்லது தட்டச்சு அல்லது சுருக்கெழுத்து தகைமை :----.

7. அரச சேவையில் பணியாற்றும் ஒருவரெனில் :-

7.1 திணைக்களத்தின்/நிறுவனத்தின் முகவரி :----.

7.2 தற்போது வகிக்கும் பதவி :----.

7.3 சேவைக்காலம் :----.

7.4 நிரந்தர சம்பளமுடையதா அல்லது தற்காலிகமானதா :----.

7.5 அரச சேவையில் பணியாற்றி அதிலிருந்து விலகியிருப்பின் அதற்கான காரணம் :----.

8. நீங்கள் எப்போதாவது ஏதேனும் குற்றமொன்றிற்காக நீதிமன்றத்தி னால் குற்றவாளியாக்கப்பட்டுள்ளீர்களா ? :----.

(ஆம் எனின் விபரங்களைக் குறிப்பிடவும்.) :----.

| ஆம் | | இல்லை | |
|---|---|---|---|

(உரிய கூட்டினுள் அடையாளமிடவும்)

9. பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டு தொடர்பான விபரம் :

(i) பரீட்சைக் கட்டணம் செலுத்தப்பட்ட அலுவலகம் :----.
(ii) பற்றுச்சீட்டு இலக்கம் மற்றும் திகதி :----.
(iii) செலுத்திய தொகை :

| பற்றுச்சீட்டை கழறாதவாறு இங்கே ஒட்டவும். |
|---|

10. **விண்ணப்பதாரியின் உறுதியுரை :**

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானவையும் சரியானவையும் எனவும், சகல பகுதிகளும் சரியாகப் பூரணப்படுத்தப்பட்டுள்ளன எனவும், என்னால் வழங்கப்பட்டுள்ள இந்த வெளிப்படுத்துகை பொய் யானது என உறுதிப்படுத்தப்படுமிடத்து, நியமனம் செய்யப்பட முன்னர் தகுதியற்றவராகுவதோடு, நியமனம் செய்யப்பட்ட பின்னர் சேவையிலிருந்து இடைநிறுத்தப்படுவதற்கும் உட்படுத்தப்படுவேன் என நான் அறிவேன் எனவும், சகல சட்டதிட்டங்களுக்கும் கீழ் பணிவேன் எனவும் வெளிப்படுத்துகின்றேன்.

----,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

11. **விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :**

இவ்விண்ணப்பப்படிவத்தைச் சமர்ப்பிக்கின்ற திரு./திருமதி/செல்வி ....................................... அவர்களை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் எனவும், அவர் என் முன்னிலையில் ................................. ஆந் திகதி அவரது கையொப்பத்தை இட்டாரென்பதையும் உறுதிப்படுத்துகின்றேன்.

----,
கையொப்பத்தை உறுதிப்படுத்தும்
அலுவலரின் கையொப்பம்.

உறுதிப்படுத்தும் அலுவலரின் முழுப்பெயர் :----.
பதவி :----.
முகவரி :----.
(பதவி முத்திரையை இடவும்.)
திகதி :----.

3-623

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.